## முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்

## M.C.O.P.No.122/2022

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | சிவசங்கர் |
| தகப்பனார் / கணவர் | .. | பெருமாள் |
| வயது | .. | 35 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | ராந்தம் |
| தாலுக்கா | .. | வெம்பாக்கம் |

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16ஆம் நாள் திங்கட்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

வழக்கில் மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். முதல் தகவல் அறிக்கை நகல் ம.த.சா.ஆ.1, மருத்துவர் வழங்கிய காயச்சான்றின் நகல் ம.த.சா.ஆ.2, விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு புத்தகம் நகல் ம.த.சா.ஆ.3, விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பாலிசி நகல் ம.த.சா.ஆ.4, விபத்து ஏற்படுத்திய வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல் ம.த.சா.ஆ.5, மனுதாரர் ஆதார் அட்டை ம.த.சா.ஆ.6, 04.05.2021 தேதியிட்ட சவிதா மருத்துவமனையில் வழங்கிய டிஸ்சார்ஜ் சம்மரி நகல் ம.த.சா.ஆ.7, 09.05.2021 தேதியிட்ட வேலூர் நலம் மருத்துவமனையில் வழங்கிய டிஸ்சார்ஜ் சம்மரி நகல் ம.த.சா.ஆ.8,

மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கை நகல் ம.த.சா.ஆ.9, மனுதாரரின் ஓட்டுநரின் உரிமம் நகல் ம.த.சா.ஆ.10, மனுதாரர் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ பில்கள் ம.த.சா.ஆ.11 ஆகும்.

**குறுக்கு விசாரணை**

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**